முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

**முன்னிலை: திருமதி K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் செவ்வாய்கிழமை.

**குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.115/2024**

*(CNR.No.TNSV01002667/2024)*

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சிவகங்கை. |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | ஆண்டு பட்டிகை வழக்கு எண்.57/2014 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தமிழ் நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய<br>குற்ற எண்.17/2013 |
| எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் | அன்பழகன் (வயது 47)<br>த/பெ.காத்தமுத்து(எ)களஞ்சியம்,<br>டாஸ்மாக் மதுபான கடை எண்:7665<br>மேற்பார்வையாளர்,<br>கோவிலூர், காரைக்குடி,<br>சிவகங்கை மாவட்டம்.<br>(இருப்பு) கீழக்கோட்டை<br>ஆர்.எஸ்.மங்கலம், இராமநாதபுரம் மாவட்டம். |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | விசாரணை நீதிமன்றம், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்பதால் எதிரி மீது இதச பிரிவுகள் 409-ன் கீழ் குற்றவாளி இல்லையென தீர்மானித்து குவிமுச.248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரியின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்யப்படுகிறது. |
| தண்டனை உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா, | **இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டுபட்டிகை |

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 17:59:27 +05'30'

| | |
|---|---|
| | வழக்கு எண்.57/2014-ல் கடந்த 17.07.2023-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் | 24.07.2024 |
| ஆஜராகப் பணிக்கப்பட்ட நாள் | 11.09.2024 |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | 21.04.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 01.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.*A*.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.*G*.குணசேகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>தீ ர் ப் பு ரை-</u>

இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்:57/2014-ல் உள்ள சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளர் மேல்முறையீட்டாளர் ஆவார்.

**2. <u>எதிர்மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:-</u>**

சிவகங்கை மாவட்டம் கோவிலூர் டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடை எண்:7665-ல் 26.06.2013ம் தேதி இவ்வழக்கில் சாட்சி-1 சிவகங்கை டாஸ்மாக் லிமிட், மேலாளர் திரு.கோபிநாத் அவர்கள் உத்தரவுப்படி சாட்சி-2

டாஸ்மாக் தாசில்தார் திரு.முருகானந்தம் மற்றும் சாட்சி-3 டாஸ்மாக் மதுபானக்கடை ஆடிட்டர் திரு.பாலசுப்பிரமணியன் மற்றும் அவரது குழுவினருடன் சென்று மேற்படி மதுபானக்கடையை 100% மாதாந்திர தணிக்கை செய்த போது, தணிக்கையின் இறுதில் சரக்கு வரவு இருப்பு மற்றும் விற்பனை தொகையில் ரூ.4,22,740/- தொகையினை மேற்படி டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடையில் மேற்பார்வையாளராக பணிபுரிந்த எதிரி தன் கைவசம் ஒப்படைக்கப்பட்ட சொத்திற்கு கணக்கு காட்ட கடமைப்பட்டவராக இருந்தும், அதனை வங்கியில் செலுத்தாமல் டாஸ்மாக் நிர்வாகத்திற்கு சேரவேண்டிய ரூ.4,22,740/- கையாடல் செய்து குற்றம் செய்து குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது இதச பிரிவு 409-ன் கீழ் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**4.** விசாரணை நீதிமன்றம், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்பதால் எதிரி மீது இதச பிரிவுகள் 409-ன் கீழ் குற்றவாளி இல்லையென தீர்மானித்து குவிமுச.248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி

தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய மேல்முறையீட்டாளர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**5. மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:**

*i)* விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்ட விதிகளுக்கு புறம்பாகவும் சாட்சிய சட்டத்திற்கு முரணாகவும் பகரப்பட்டுள்ளது.

*ii)* மேற்படி விசாரணை நீதிமன்றம் வனையப்பெற்ற குற்றச்சாட்டுகளில் இதச 409 பிரிவின் படி கண்டுள்ள சரத்துகளின் படி புகாரும் முதல் விசாரணை அமைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு எதிரிக்கு குற்றவாளி என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும். மேற்படி பிரிவின் கீழ் விசாரணை நீதிமன்றம் குற்றச்சாட்டு வனையப்பட்டிருந்த போதும் அதனை மெய்ப்பிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சிகள் தனது சாட்சியத்தில் சொல்லப்பட்டிருந்த நிலையில் மேற்படி குற்ற பிரிவுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளன என கருத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றம் இந்த எதிரியை குற்றவாளி என தீர்மானித்து தண்டனை வழங்கியிருக்க வேண்டும்.

*iii)* மேலும் புகார்தாரர் தனது புகாரில் கடந்த 26.06.2013 ஆம் தேதி டாஸ்மாக் கடை எண்.7665-ல் சரக்குகளின் எண்ணிக்கை பற்றி தணிக்கை செய்த போது அங்கு மேற்பார்வையாளராக பணிபுரிந்த எதிரி ரூ.4,22,740/- பணம் அரசிற்கு செலுத்தாமல் கையாடல் செய்த விவரம் தெரிய வந்து புகார் அளிக்கப்பட்டு அதன்படி மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் குற்ற எண்:17/2013 என இதச பிரிவு 409 படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வழக்கில் புலன்

விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்று பின்பு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*iv)* மேற்படி விசாரணை நீதிமன்றம் இதச பிரிவு 409-ன் படியான குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில் மேற்படி பிரிவு பொது ஊழியர் அல்லது வங்கியர், வணிகர், தரகு வணிகர், தரகர், அட்டர்னி அல்லது முகவர் என்பவரின் தொழில்முறையில் எந்த வகையிலாவது ஒரு சொத்தின் மீது ஏதேனும் ஆதிக்கம் பெற்று அல்லது அவரிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தால் அந்த சொத்தைப் பொறுத்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்கின்ற நபர் தண்டிக்கப்பட வேண்டிய நபர் ஆவார். மேலும் பிரிவு 405 இதச படி பொது ஊழியர் எந்த முறையிலும் ஒரு சொத்து ஒப்படைக்கப்பட்டிருந்தது அல்லது சொத்தின் மீது ஆதிக்கம் பெற்றிருந்த அந்த சொத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்கின்ற அல்லது அந்த சொத்தை தனது சொந்தம் தனது சொந்த உபயோகத்திற்கு மாற்றுகிற நபர் குற்றமுறு நம்பிக்கை மோசடி செயலில் ஈடுபட்ட நபர் ஆகிறார்.

*v)* மேற்படி பிரிவின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட எதிரியானவர் பொது ஊழியர்கள் என்ற நிலையில் அவர் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்த சொத்தினை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்து குற்றமும் நம்பிக்கை மோசடி செயலில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபணம் ஆகியுள்ள நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி பிரிவு 409 இதசவின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு தண்டனை வழங்கியிருக்க வேண்டும். அதை தவிர்த்து

மாறாக விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*vi)* மேற்படி வழக்கி தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு நிரூபணம் செய்யும் விதமாகவும், மேற்படி குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும் விதமாகவும், விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியத்தில் தெள்ளத் தெளிவாக சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் அரசு தாப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து எதிரிக்கு குற்றவாளி என தீர்மானித்து தீர்ப்பு பகரப்பட்டிருக்க வேண்டும்.

*vii)* மேலும் அ.சா.1, அ.சா.2, அ.சா.3 தனது சாட்சியத்தில் டாஸ்மாக் கடை எண்.7665-ல் தணிக்கை செய்ததையும், மேற்படி தணிக்கை செய்யும் போது அரசுக்கு செலுத்த வேண்டிய ரூ.4,22,740/- பணத்தினை எதிரியானவர் செலுத்தாமல் கையாடல் செய்துள்ளது தெரிய வந்ததன் அடிப்படையில் உடனடியாக தனது உயர்அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி காவல் நிலையத்தில் புகார் அளித்து எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் அளித்து அதன் பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கு வாதியால் குற்றப் பத்திரிக்கை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*viii)* மேற்படி டாஸ்மாக் கடை எண்.7665-ல் எதிரி ரூ.4,22,740/- பணம் கையாடல் செய்தது அதற்கான ஆவணங்கள் சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அத்துடன் மேற்படி ஆவணங்களை ஊர்ஜிதம் செய்யும் விதமாக மேற்படி அரசு தரப்பு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:00:23 +0530

சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னீடு இந்த எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருப்பது சட்டத்திற்கு முரணாக உள்ளது.

*ix)* மேலும் அ.சா.4 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் எதிரியானவர் கையாடல் நடைபெற்ற காரைக்குடி கோவிலூர் டாஸ்மாக் கடையில் மேற்பார்வையாளராக பணிபுரிந்தார் என்றும், மேற்படி டாஸ்மாக் கடை எண்.7665-ல் எதிரி ரூ.4,22,740/- பணம் கையாடல் நடைபெற்ற விவரத்தையும் தாங்கள் தணிக்கையின் போது அறிந்ததாகவும் அதன் பின்னிடு எதிரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டு மேற்படி கடையின் பொறுப்புகளை ஏற்று மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்ததாகவும், விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் டாஸ்மாக் கடை எண்.7665-ல் வழக்கு சம்பவம் நடைபெற்றதையும் எதிரியானவர் அரசு தரப்பில் எதிரி மேற்பார்வையாளராக பணிபுரிந்ததையும் ஊர்ஜிதப்படுத்தி அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் விசாரணை நீதிமன்றம் எதிரியானவர் பணி அமர்த்தப்பட்டதற்கான நியமன ஆணை இல்லை வருகை பதிவேடுகள் சான்றாவணமாக அரசு தரப்பில் ஒப்படைக்கப்படவில்லை. மேலும் அரசு தரப்பில் ஆவணங்கள் இல்லை எதிரிக்கு என்னென்ன பணி செய்ய வேண்டும் என நிபந்தனைகள் ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என கருதி மேற்படி எதிரியானவர் மேற்படி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என கருதி விசாரணை

நீதிமன்றம் மேற்படி குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரியை குற்றமற்றவர் என தீர்மானித்து போதிய ஆவணங்கள் இல்லை என கருதி விடுதலை செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

*x)* மேலும் அரசு தரப்பில் எதிரி கையாடல் செய்ததற்கான ஆவணங்களை விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் முறையாக சமர்ப்பித்து மேலும் எதிரி பணிபுரிந்த டாஸ்மாக் கடைக்கு முந்தைய மாதத்திற்கு சரக்குகள் இருப்பு மற்றும் எதிரி வேலை பார்த்த கடைக்கு சரக்குகள் அனுப்பப்பட்ட விவரங்கள் மற்றும் விற்பனை செய்யப்பட்ட விவரங்கள் மேலும் எதிரி ரூ.4,22,740/- பணம் கையாடல் செய்த பணத்தின் கணக்குகள் ஆவணங்களாக அரசு தரப்பில் நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதற்கான சாட்சியத்தை நிரூப்பிக்கும் விதமாக சாட்சியம் விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு வலுவூட்டிய நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி ஆவணங்களையும் கருத்தில் கொள்ளாது எதிரியை விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*xi)* மேலும் எதிரி அரசு ஊழியர் என்பதை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சியம் சான்றாவணங்கள் முன்னிறுத்தப்படவில்லை என்றும், மேலும் எதிரிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகள் குறித்து அரசு தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், எதிரி கடைக்கு மேற்பார்வையாளர் என்ற முறையில் அதிகாரம் வழங்கப்பட்டதை காண்பிக்கும் விதமாக அரசு தரப்பு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாதது அரசு தரப்பு வழக்கிற்கு சந்தேகம் அமைந்துள்ளது என மேற்படி கடை 7665-ல் பணிபுரிந்த ஊழியர்களை அரசு தரப்பு

விசாரணை செய்யப்படவில்லை. எதிரிக்கும் மேற்பார்வையாளர் என்ற முறையில் வழங்கப்பட்ட அதிகாரத்தை எதிரி தவறாக பயன்படுத்தி கையாடல் செய்துள்ளார் என்பதை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சியோ சான்றாவணங்களோ முன்னிறுத்தப்படவில்லை என எதிரி மீது குற்றச்சாட்டுகள் அரசு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என விசாரணை நீதிமன்றம் தீர்மானித்து இருப்பது சட்ட விதிகளுக்கு முரணாக உள்ளது.

*xii)* மேலும் எதிரி தரப்பில் மேற்படி வழக்கினை எதிரி குற்றமற்றவர் என விசாரணை நீதிமன்றத்தில் நிரூபணம் செய்வதற்கு எவ்வித சாட்சியங்களும் சான்றாவணங்களும் முன்னிறுத்தப்படாத சூழ்நிலையிலும் மேலும் எதிரி மேற்படி கடையில் மேலாளராக பணி புரியவில்லை என எவ்வித சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படாத சூழ்நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் தாமாக முன்வந்து எதிரி மேற்படி கடையில் பணிபுரியவில்லை என தீர்மானித்து அதற்கான ஆவணங்களை அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை என தீர்மானித்து மேற்படி எதிரியை விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*xiii)* மேலும் அரசு தரப்பில் 1 முதல் 12 வரையிலான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு மேற்படி எதிரி இதச பிரிவு 409-ன் கீழ் குற்றம் புரிந்ததாக சாட்சியங்கள் மூலமும் சான்றாவணங்கள் மூலமும் தெள்ளத் தெளிவாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் எதிரியும்

மேற்பார்வையாளராக பணிபுரிந்து ரூ.4,22,740/- பணம் கையாடல் செய்து மேற்படி பணத்தினை அரசிற்கு செலுத்தாமல் தனது சொந்த செலவிற்கு செலவு செய்து வந்துள்ளதைக் கருத்தில் கொண்டு மேற்படி எதிரியை குற்றவாளி என தீர்மானித்து தண்டனை வழங்கி இருக்க வேண்டுமே தவிர மாறாக விடுதலை செய்திருப்பது சட்ட விதிகளுக்கு முரணாக உள்ளது.

*xiv)* மேற்படி மதுபானக் கடையில் எதிரி மேற்பார்வையாளராகவும் பணிபுரிந்து ரூ.4,22,740/- பணம் கையாடல் செய்து செய்த பணம் இன்று வரை எதிரி வசம் உள்ள நிலையில் மேற்படி ரூ.4,22,740/- பணம் இன்று வரை அரசிற்கு பெரும் இழப்பினை ஏற்படுத்தியுள்ள நிலையில், மேற்படி விசாரணை நீதிமன்றம் இழப்பு ஏற்பட்டது அரசு தரப்பு ஆவணங்கள் மூலம் தெரியவருவதாகவும் ஊர்ஜிதம் செய்துவிட்டு எதிரி அரசு பணி செய்ததற்கு அரசு தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என கருதி எதிரியை விசாரணை நீதிமன்றம் விடுதலை செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

எனவே, மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டினை கோப்பிற்கு எடுத்து, சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2-ல் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.57/2014-ல் கடந்த 17.07.2023-ம் தேதியன்று வழங்கிய தீர்ப்பை நீக்கரவு செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதித்து உத்தரவிட வேண்டி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:01:25 +0530

21.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

**6. இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்:-**

1 விசாரணை நீதிமன்றம் எதிரி மீதுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவு 409-ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று கண்டுணர்ந்திருப்பது சரியானதா?

2 விசாரணை நீதிமன்றமான சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டு பட்டிகை வழக்கு எண்.57/2014-ல் கடந்த 17.07.2023-ம் தேதியன்று இவ்வழக்கு எதிரி/எதிர்மேல்முறையீட்டாளரை விடுதலை செய்து பிறப்பித்த தீர்ப்பு ரத்து செய்யத்தக்கதா அல்லது நிலைநிறுத்தத்தக்கதா? அல்லது மாற்றியமைக்கத்தக்கதா?

3 இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

**பிரச்சனைகள் : 1 முதல் 3:-**

**7)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. சிவகங்கை மாவட்டம் கோவிலூர் டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடை எண்:7665-ல் 26.06.2013-ம் தேதி இவ்வழக்கில் சாட்சி-1 சிவகங்கை டாஸ்மாக் லிமிட், மேலாளர் திரு.கோபிநாத் அவர்கள் உத்தரவுப்படி சாட்சி-2 டாஸ்மாக் தாசில்தார் திரு.முருகானந்தம் மற்றும் சாட்சி-3 டாஸ்மாக் மதுபானக்கடை ஆடிட்டர் திரு.பாலசுப்பிரமணியன் மற்றும் அவரது குழுவினருடன் சென்று மேற்படி மதுபானக்கடையை 100% மாதாந்திர தணிக்கை செய்த போது, தணிக்கையின் இறுதில் சரக்கு வரவு இருப்பு மற்றும் விற்பனை தொகையில் ரூ.4,22,740/- தொகையினை மேற்படி டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடையில் மேற்பார்வையாளராக பணிபுரிந்த எதிரி தன் கைவசம் ஒப்படைக்கப்பட்ட சொத்திற்கு கணக்கு காட்ட கடமைப்பட்டவராக இருந்தும்,

அதனை வங்கியில் செலுத்தாமல் டாஸ்மாக் நிர்வாகத்திற்கு சேரவேண்டிய ரூ.4,22,740/- கையாடல் செய்து குற்றம் செய்து குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது இதச பிரிவு 409-ன் கீழ் குறிப்பிட்டு எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** இருதரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து விசாரணை நீதிமன்றம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்பதால் எதிரி மீது இதச பிரிவுகள் 409-ன் கீழ் குற்றவாளி இல்லையென தீர்மானித்து குவிமுச.248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய மேல்முறையீட்டாளர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**9)** இவ்வழக்கில் உள்ள சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.10 திரு.கோபிநாத் என்பவர் தணிக்கை தணிக்கை குழுவை தணிக்கைக்கு அனுப்பியது பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சி. அ.சா.1 மற்றும் அ.சா.4 சாட்சிகள் தணிக்கைக்கு தணிக்கை குழுவுடன் சென்று தணிக்கை செய்தது பற்றி கூறும் சாட்சிகள். அ.சா.2, அ.சா.3, அ.சா.5 ஆகியோர்கள் எதிரி வேலை பார்த்த டாஸ்மாக் கடையில் கையாடல் செய்தது பற்றி கேள்விப்பட்டது பற்றியும், எதிரி சம்பாதித்த பணத்தில் இரண்டு சக்கர வாகனம் வாங்கியதாக கூறியதை பற்றியும் கூறும் சாட்சிகள். அ.சா.6, அ.சா.7, அ.சா.8, அ.சா.9 ஆகியோர்கள் எதிரி டாஸ்மாக் கடையில் கையாடல்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:01:45 +0530

21.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

செய்தது கேள்விப்பட்டது பற்றியும் கூறும் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.1 தனது சாட்சியத்தில் தான் தற்பொழுது சிவகங்கை டவுனில் வசித்து வருகிறேன் என்றும், தான் மதுரையிலுள்ள ஒரு கார்மென்ட்ஸ் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன் என்றும், பட்டியல் சாட்சிகள் 1, 2, 3 ஐ தனக்கு தெரியும் என்றும், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு பட்டியல் சாட்சி பாலசுப்பிரமணியத்தின் உதவியாளராக வேலை பார்த்து வந்தேன் என்றும், தான் ப்ளஸ் டூ முடித்து உள்ளேன் என்றும், கோவிலூர், திருப்பத்தூர் ஆகிய ஊர்களிலுள்ள கடை நம்பர் ஞாபகமில்லை என்றும், டாஸ்மாக் கடைக்கு சென்றேன் என்றும், அங்கு தானும், பட்டியல் சாட்சி 1, 2, கண்ணப்பன் ஆகியோர்கள் சென்றோம் என்றும், அங்கு சென்று ஆய்வு செய்தோம் என்றும், சரக்கு இருப்பு குறைவாக இருந்ததையும், வரவு செலவு சார்ட்டேஜ் ஆக இருந்தததையும் தாங்கள் கண்டுபிடித்தோம் என்றும், அவர்களுக்கு தான் உதவி செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10) மேலும் இவ்வழக்கின் கேள்விப்பட்ட சாட்சிகள் அ.சா.2, அ.சா.3 மற்றும் அ.சா.5 தங்களது சாட்சியத்தில் சிவகங்கை மாவட்டம் கோவிலூர் மதுபானக் கடையின் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்த அன்பழகனை தங்களுக்கு தெரியும் என்றும், அன்பழகன் கோவிலூர் மதுபானக் கடையில் மேற்பார்வையாளராக பணியில் இருந்த போது தான் மேற்பார்வையாளராக பணிபுரியும் கொக்கூரணி டாஸ்மாக் கடை எண் 7033-ல் அன்பழகன் உரிமம் பெற்று பார் நடத்தி வந்தார் என்றும், அந்த வகையில் அன்பழகனை தனக்கு தெரியும் என்றும், அன்பழகன் காரைக்குடி கோவிலூர் மதுபானக் கடையில்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:01:55 +0530

மேற்பார்வையாளராக பணிபுரிந்த போது அங்கு ஏதோ கையாடல் நடந்து விட்டதாகவும், அது சம்பந்தமாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இருப்பதாக கேள்விபட்டதாகவும், வழக்கு பதிவு செய்யப்பட்டு இருந்த சமயத்தில் கொக்கூரணி டாஸ்மாக் கடையின் பாரை அவரது மச்சினன் ரத்தினம் மேற்பார்வை செய்து வந்தார் என்றும், சாட்சியமளித்துள்ளார்கள்.

**11)** மேலும், இவ்வழக்கில் அ.சா.4 தனது சாட்சியத்தில் தற்பொழுது மதுரை டாஸ்மாக் அலுவலகத்தில் மாவட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 2013-ம் ஆண்டு சிவகங்கை மாவட்டத்தில் டாஸ்மாக்கில் மாவட்ட உதவி மேலாளராக பணிபுரிந்து வந்தேன் என்றும், இந்த வழக்கின் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 26.06.2013-ம் தேதி தங்கள் மாவட்ட மேலாளர் கோபிநாத் அவர்கள் உத்தரவின் பேரில் காரைக்குடி வட்டத்தில் இருக்கும் கோவிலூர் கிராமத்திலுள்ள 7665 என்ற எண்ணுள்ள டாஸ்மாக் கடைக்கு 100 சதவீத திடீர் தணிக்கைக்காக சென்றோம் என்றும், தன்னுடன் பட்டியல் சாட்சிகள் கோபாலகிருஷ்ணன் மற்றும் ஹரிஹரன் ஆகியோர்கள் வந்தனர் என்றும், கடையில் இந்த வழக்கின் எதிரி இருந்தார் என்றும், அப்பொழுது காலை சுமார் 11.00 மணியிருக்கும் என்றும், அந்த கடையில் உள்ள சரக்குகள் மற்றும் கையிருப்பு ரொக்கத்தை 100 சதவீத தணிக்கை செய்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** மேலும், அ.சா.6 தனது சாட்சியத்தில் தான் பாதரகுடியிலுள்ள டாஸ்மாக் கடையில் 7657 கடையில் சூப்பர்வைசராக பணியாற்றி வருகிறேன் என்றும், 26.06.2013-ம் தேதியில் மாவட்ட மேலாளர் அலுவலகத்திலிருந்து கணக்கு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:02:03 +0530

எடுத்ததாகவும், மாவட்ட மேலாளர் அலுவலகத்திலிருந்து 27.06.2013-ம் தேதி கோவிலூர் பக்கத்திலுள்ள 7665 என்ற எண் கொண்ட கடையில் தான் சூப்பர்வைசராக பொறுப்பெடுத்துக் கொள்ளும் படி மாவட்ட மேலாளர் வாய்மொழி உத்தரவு கொடுத்தார் என்றும், அதன் படி 27-ம் தேதி அன்றே கூடுதல் பொறுப்பாக கோவிலூர் பக்கத்திலுள்ள 7665 என்ற எண் கொண்ட கடையில் தான் சூப்பர்வைசராக பொறுப்பெடுத்துக் கொண்டேன் என்றும், போலீசார் விசாரித்தார்களா என்று தனக்கு தற்பொழுது ஞாபகமில்லை என்றும், தான் சுமார் 2 அல்லது 3 மாதங்களாக கூடுதல் பொறுப்பாக கோவிலூர் பக்கத்திலுள்ள 7665 என்ற எண் கொண்ட கடையில் தான் சூப்பர்வைசராக பொறுப்பெடுத்துக் கொண்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** மேலும் அ.சா.7 தனது சாட்சியத்தில் டாஸ்மாக் கடை எண் 7656 கடையில் சூப்பர்வைசராக பணியாற்றி வருகிறேன் என்றும், சுமார் 16 வருடங்களாக டாஸ்மாக் கடையில் சூப்பர்வைசராக பணியாற்றி வருகிறேன் என்றும், அசா6 ஐ தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரி அன்பழகனை தனக்கு தெரியும் என்றும், தான் கருணைதாசன் என்பவரிடமிருந்து 2013-ம் வருடம் 6-வது மாதம் கோவிலூரிலுள்ள 7665 கடை எண் கொண்ட கடையின் பொறுப்பை தான் வாங்கிக் கொண்டேன் என்றும், அன்பழகன் இல்லாததால் கருணைதாசனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது என்றும், அதன் பின்னர் அவரிடமிருந்து தன்னிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** மேலும் அ.சா.8 தனது சாட்சியத்தில் கடந்த 2016-ம் வருடம்

சிவகங்கை டாஸ்மாக் மாவட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், டாஸ்மாக் மாவட்ட மேலாளர் திரு.ராஜேந்திரன் அவர்கள் கொடுத்த ஆவணங்களையும், மாவட்ட மேலாளர் சொன்ன புகாரை டைப் செய்தும், போலீசில் விசாரணைக்கு கொடுத்தோம் என்றும், 2013-ம் வருடம் கோவிலூரிலுள்ள 7665 என்ற டாஸ்மாக் கடையில் சுமார் ரூ.4 லட்சத்திற்கு மேலாக இருப்பு குறைந்திருப்பதாகவும், அதன் பேரில் நடவடிக்கை எடுப்பதற்காக, அந்த சமயத்தில் கடையில் ஆஜர் எதிரி அன்பழகன் சூப்பர்வைசராக இருந்ததால் அவர் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி மாவட்ட மேலாளர் அவர் மீது நடவடிக்கை எடுக்க உதவியாக டைப் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**15)** மேலும் அ.சா.9 தனது சாட்சியத்தில் தான் 2013-ம் வருடம் சிவகங்கை தமிழ்நாடு வாணிப கழகம், டாஸ்மாக் லிமிட்டில் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் துணை ஆட்சியர்/மாவட்ட மேலாளர் பொறுப்பில் இருந்து வந்துள்ளேன் என்றும், 26.06.2013-ம் தேதி அன்று காரைக்குடி கோவிலூர் டாஸ்மாக் கடை எண்.7665 தனது முன்னவரால் தணிக்கை குழுவுடன் தணிக்கை செய்ததில் சுமார் ரூ.4,22,740/- கையாடல் செய்தது கண்டுபிடிக்கப்பட்டதால், அப்போதைய மேலாளரால் நடவடிக்கை எடுக்க சிவகங்கை காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினார் என்றும், இதன் பேரில் அலுவலகத்திலுள்ள உரிய ஆவணங்களை அனுப்பி வைக்க சிவகங்கை மாவட்ட குற்றவியல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆவணங்களின் நகல்களை

மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** மேலும் இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.10 தனது சாட்சியத்தில் தான் தற்பொழுது சென்னையில் குடியிருந்து சென்னையில் உள்ள *Way cool* கம்பெனியில் காசாளராக சுமார் 5 வருடமாக வேலை பார்த்து வருகிறேன் என்றும், இதற்கு முன் தனியார் கம்பெனியில் வேலை பார்ப்பதற்கு முன்பு உதவி மேலாளராக பணிபுரிந்து வந்தேன் என்றும், ஆஜர் எதிரி அன்பழகனை தனக்கு தெரியும் என்றும், காரைக்குடியில் உள்ள அரசு மதுபானக் கடையில் சூப்பர் வைசராக பணிபுரிந்த போது தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவானது தன்னால் சொல்லப்பட்டு அப்போதைக்கு சிவகங்கையில் டாஸ்மாக் அலுவலகத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்த முருகானந்தம் என்பவர் புகார் மனுவில் கையொப்பம் செய்துள்ளார் என்றும், அரசு டாஸ்மாக் மாவட்ட மேலாளர் 2013-ம் வருடம் ஜூன் மாதம் தேதி தற்போது ஞாபகம் இல்லை என்றும், அன்றைய தேதியில் தங்களது உதவி மேலாளர் முருகானந்தம் டாஸ்மாகில் உள்ள ஒரு தணிக்கை குழு சேர்ந்து அரசு மதுபானக் கடை எண் 7665 கடையை தணிக்கை ஆய்வு செய்ய குழு அனுப்பப்பட்டது என்றும், மேற்படி கடை எண் 7665 கடையில் எதிரி அன்பழகன் சூப்பர் வைசராக பணியாற்றி வந்தார் என்றும், மேற்படி கடையை ஆய்வு செய்த முருகானந்தம் தணிக்கை மற்றும் ஆய்வின் போது *Shortage* தொகை 4 லட்சத்திற்கு மேல் இருந்தது என்றும், தொகையை தற்சமயம் தன்னால் குறிப்பாக சொல்லமுடியவில்லை என்றும், மேற்படி குறைவு தொகையை அவர் கடையின் மதுபானங்களை விற்று வந்த பணத்தை அரசுக்கு செலுத்தாமல் கையில்

வைத்துள்ளார் என்று தங்களுக்கு ஆய்வின் போது தெரியவந்தது என்றும், மேற்படி குழு தன்னிடம் தாக்கல் செய்த பேரில் தான் தணிக்கை அறிக்கை செய்த போது கண்டுபிடித்த தொகையை தான் எழுத்துபூர்வமாக தான் ஒரு கடிதம் அனுப்பினேன் என்றும், தான் கடிதம் எழுதுவதும் அதற்கு சரிவர பதில் எதுவும் கூறாமலும் பணத்தை கட்டாமலும் தாமதப்படுத்தினார் என்றும், அதனால் தான் எதிரி அன்பழகன் மீது அரசு பணத்தை கையாடல் செய்து குற்றம் புரிந்துள்ளார் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் எழுத்துபூர்வமாக புகார் மனுவை தான் சொல்ல அதை உதவி மேலாளர் அதில் கையொப்பம் செய்து புகார் மனுவை நடவடிக்கை எடுக்க சொன்னார் என்றும், அது அ.சா.ஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**17)** மேலும் இவ்வழக்கில் ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது, இவ்வழக்கின் அ.சா.4-ன் சாட்சியத்தை பார்வையிடும் போது அ.சா.4 மற்றும் அ.சா.1 உடன் இணைந்து டாஸ்மாக் கடை எண்:7665-ல் தணிக்கை செய்துள்ளார்கள் என்பதையும், அ.சா.ஆ.4 தணிக்கை செய்த ஆய்வறிக்கையினை பார்வையிடும் போது டாஸ்மாக் நிறுவனத்தின் கீழ் காரைக்குடியில் அமைந்துள்ள கடை எண்:7665-ல் ரூ.4,22,740/- குறைவாக உள்ளது என்பதையும், அ.சா.ஆ.5 26.06.2013-ம் தேதிக்கு முந்தைய தணிக்கை செய்த ஆய்வறிக்கை ஜூன் மாதம் ரூ.25,75,670/- தொகைக்கான சரக்குகள் உள்ளது என்பதையும், மேலும் ரொக்கமாக ரூ.37,030/- தொகை ஜூன் மாத தொடக்கத்தில் கடை எண்: 7665-ல் இருந்துள்ளது என்பதையும், மேலும் அ.சா.ஆ.6 சரக்குகளின் விவரத்தை

பார்வையிடும் போது ரூ.23,06,880/- தொகைக்கான சரக்குகள் அனுப்பப்பட்டுள்ளது என்பதும் இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

**18)** மேலும் அ.சா.ஆ.7 டாஸ்மாக் கடை எண்:7665-ல் 26.06.2013-ம் தேதி தணிக்கை செய்த போது இருந்த சரக்குகளின் விபரம் குறித்து பாலசுப்பிரமணியன் என்பவர் கொடுத்த சரக்குகளின் விபரத்தை பார்வையிடும் போது ரூ.23,06,880/- தொகைக்கான சரக்குகள் கடை எண்:7665 கடைக்கு அனுப்பபட்டுள்ளது என்பதையும், மேலும் அ.சா.ஆ.8 கடை எண்:7665-ல் 26.06.2013-ம் தேதி தணிக்கை செய்த போது இருந்த கையிருப்பு தொகையாக ரூ.13,650/- உள்ளது என்பதையும், அ.சா.ஆ.6 கடை எண்:7665-ல் டாஸ்மாக் நிறுவனத்திற்கு ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை ரூ.13,15,830/- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, காரைக்குடி கிளையில் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும், மேற்படி விவாதத்தின் மூலம் தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் *(Tasmac)* நிர்வாகத்திலிருந்து கடை எண்:7665-ல் 01.06.2013-ம் தேதி ரூ.25,75,670/- மதிப்பிலான சரக்குகள் இருந்துள்ளது என்பதையும், மேலும் கையிருப்பு தொகையாக 01.06.2013-ம் தேதி ரூ.37,030/- தொகை இருப்பு உள்ளது என்பதையும், 01.06.2013 முதல் 26.06.2013-ம் தேதி வரை ரூ.23,06,830/- மதிப்பிலான சரக்குகள் கடை எண்:7665-க்கு டாஸ்மாக் நிறுவனத்தால் அனுப்பப்பட்டுள்ளது என்பதையும், அ.சா.ஆ.6, அ.சா.ஆ.4 ஆவணத்தை பார்வையிடும் போது தெளிவாகிறது. மொத்தமாக ரூ.49,19,580/- தொகைக்கு சரக்குகளும் கையிருப்பு தொகையும் கடை எண்:7665-ல் 26.06.2013-ம் தேதி

வரை இருப்பு உள்ளது என்பதையும், அ.சா.ஆ.9 ஆவணத்தை பார்வையிடும் போது கடை எண்:7665-ல் ரூ.13,15,830/- டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது என்பது அ.சா.ஆ.9 மூலம் அறிய முடிகிறது.

**19)** மேலும் அ.சா.ஆ.8 பார்வையிடும் போது கடை எண்:7665-ல் ரூ.13,580/- தொகை கையிருப்பு தொகை இருந்துள்ளது என்பதையும், மேலும் கடை எண்:7665-ல் கையிருப்பு தொகையின் மொத்த மதிப்பு ரூ.31,67,430/- இருந்துள்ளது என்பது அ.சா.ஆ.4 ஆவணத்தின் வாயிலாக அறிய முடிகிறது. எனவே அ.சா.ஆ.4 ஆவணத்தை பார்வையிடும் போது கையிருப்பு தொகை மற்றும் சரக்குகள் இருப்பு மொத்தமாக ரூ.49,19,580/-ற்கு கடை எண்:7665-ல் இருப்பாக இருக்க வேண்டும். ஆனால் கடை எண்:7665-ல் வங்கியில் செலுத்திய தொகை, கையிருப்பு தொகை மற்றும் சரக்குகளின் ஆகியவற்றின் மொத்தமாக ரூ.44,96,840/- மட்டுமே இருந்துள்ளது என்பதையும், இருப்பு குறைவு ரூ.4,22,740/- இருந்துள்ளது என்பதை அ.சா.ஆ.4 ஆவணத்தின் வாயிலாக அறிய முடிகிறது. ஆனால் எதிரி கடை எண்:7665-ல் மேற்பார்வையாளராக பணிபுரிந்ததாக அரசுத்தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும், மேலும் எதிரிக்கு மேற்பார்வையாளராக பணிகள் ஒதுக்கப்பட்ட விபரங்கள் குறித்து அரசுத்தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும், 26.06.2013-ம் தேதி எதிரி டாஸ்மாக் கடை எண்:7665-ல் பணிபுரிந்துள்ளார் என்பதற்கான வருகைப்பதிவேட்டினையும் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:03:00 +0530

21.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

**20)** மேலும் அ.சா.ஆ.8 பார்வையிடும் போது எதிரி அரசு ஊழியர் என்பதை நிரூபிக்கும் விதமாக அரசுத்தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிறுத்தப்படவில்லை என்பதையும், மேலும் எதிரிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகள் குறித்து அரசுத்தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதையும், எனவே எதிரிக்கு கடை எண்:7665-ல் மேற்பார்வையாளர் என்ற முறையில் அதிகாரம் வழங்கப்பட்டதை காண்பிக்கும் விதமாக அரசுத்தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாதது அரசுத்தரப்பு வழக்கை சந்தேகிக்கும் விதமாக அமைந்துள்ளது என்பதையும், கடை எண்:7665-ல் பணிபுரிந்த ஊழியர்களையும் அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை என்பதையும், எதிரிக்கு மேற்பார்வையாளர் என்ற முறையில் வழங்கப்பட்ட அதிகாரத்தை எதிரி தவறாக பயன்படுத்தி கையாடல் செய்துள்ளார் என்பதையும் நிரூபிக்கும் விதமாக அரசுத்தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிறுத்தப்படவில்லை என்பதும், எனவே எதிர்மேல்முறையீட்டாளர்/எதிரி மீதான இதச பிரிவு 409-ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**21)** மேற்கண்ட வகையில் விவரித்தவாறு, விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக அரசு தரப்பில் முன்னிடப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியங்கள் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தண்டனைத் தீர்ப்புரை ஆகியவற்றுடன், இம்மேல்முறையீட்டு காரணங்களை ஒட்டு மொத்தமாக

பரிசீலித்ததில், விசாரணை நீதிமன்றம் பிறப்பித்துள்ள தண்டனை தீர்ப்புரையில் தவறு ஏதும் இருப்பதாக இந்நீதிமன்றம் கருத இயலவில்லை. எனவே விசாரணை நீதிமன்றம் எதிர்மேல்முறையீட்டாளர்/எதிரி குற்றவாளி இல்லையென்று விடுதலை செய்து தீர்வு கண்டுள்ளதில் சட்டப்படியும், வழக்கு பொருண்மைகளின்படியும் வழங்கியுள்ள தண்டனை தீர்ப்புரையில் குறுக்கிட வேண்டிய அவசியம் ஏதுமில்லை என இந்நீதிமன்றம் கருதுவதால், இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

**இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டுபட்டிகை வழக்கு எண்.57/2014-ல் கடந்த 17.07.2023-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏபரல் திங்கள் 21-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:03:19 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**நகல்:**
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சிவகங்கை.